தற்போது நடைமுறையில் வழங்கப்பட்டு வரும் 3 ஷர்ட் 2 பேண்ட் முறையை மாற்றி 5 செட் சீருடை மற்றும் 3 செட் டி ஷர்ட் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க.

**கோரிக்கை எண்: 23 பாதுகாப்பு காலணி: (Safety Shoe)**

தற்போது நடைமுறையில் வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பு காலணியை மாற்றி லிபர்ட்டி, வாரியர் போன்ற தரமான காலணியும் 3 செட் ஷாக்ஸும் வழங்கப்பட வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்க.

**சுனீல் பாலீவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

## Disputes between Workmen and Managements referred to Labour Courts for Adjudication.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில்.**

*[அரசாணை (டி) எண் 492, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (சி)த் துறை, 7 ஆகஸ்ட் 2018, ஆடி 22, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/886/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும், தமிழக அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, இணைப்பில் காணும் எழுவினாவுடன் திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. N. சதீஸ், ஓட்டுநருக்கு (பணி எண் 9170) விடுப்பில் இருந்த நாட்களான 03–02–2015 மற்றும் 04–02–2015 ஆகிய இரு நாட்கள் தகுதி வாய்ந்த விடுப்பும், 05–02–2015 அன்று வார ஓய்வும் அனுமதித்து ஒழுங்குபடுத்தி மேற்படி நாட்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**மங்கத் ராம் சர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (மதுரை) லிட், திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல்.**

*[அரசாணை (டி) எண் 512, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 4 செப்டம்பர் 2018, ஆவணி 19, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/887/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், மனித உரிமைகள் கழக தொழிற்சங்கம் பெரியகுளம் வட்டம், தேனி மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

Verified by Recordsale

**1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. பி. சுரேஷ், பணி எண் **55371**, ஓட்டுனருக்கு **25–05–2014** அன்று முதல் கட்ட ஆய்வுப்பலன் வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 513, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 4 செப்டம்பர் 2018, ஆவணி 19, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/888/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், மனித உரிமைகள் கழக தொழிற்சங்கம் ஜெயமங்கலம் அஞ்சல், தேனி மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. செ. பாலகிருஷ்ணன், பணி எண் **55777**, ஓட்டுனருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களின்றி ஒரு வருட காலத்திற்கு நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **14–07–2015** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 523, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 5 செப்டம்பர் 2018, ஆவணி 20, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/889/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், மனித உரிமைகள் கழக தொழிற்சங்கம், ஜெயமங்கலம் அஞ்சல், தேனி மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. செ. பாலகிருஷ்ணன், பணி எண் **55777**, ஓட்டுனருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களின்றி **1** (ஒன்று) வருட காலத்திற்கு நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **09–05–2014** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*அரசாணை (டி) எண் 524, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 5 செப்டம்பர் 2018, ஆவணி 20, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/890/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், மனித உரிமைகள் கழக தொழிற்சங்கம் ஜெயமங்கலம் அஞ்சல், தேனி மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947**–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எஸ். சின்னையா, பணி எண் **55514**, ஓட்டுனருக்கு நிர்வாகம் வழங்க வேண்டிய முதல் ஆய்வுப்பலனை **15–07–2015** அன்று வழங்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 525, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 5 செப்டம்பர் 2018, ஆவணி 20, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/891/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டுக்கல் என்ற நிர்வாகத்திற்கும், மனித உரிமைகள் கழக தொழிற்சங்கம், ஜெயமங்கலம் அஞ்சல், தேனி மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், **10(1)(d)** பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. செ. பாலகிருஷ்ணன், பணி எண் **55777**, ஓட்டுனருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயன்களுடன் ஆறு மாத காலத்திற்கு நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய **30–01–2017** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 526 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 5 செப்டம்பர் 2018, ஆவணி 20, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/892/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டக்கல் என்ற நிர்வாகத்திற்கும், பொதுத் தொழிலாளர் சங்கம், திண்டுக்கல் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எல். அருள்தாஸ், (பணி எண் **51499**), ஓட்டுநருக்கு வருடாந்திர ஊதிய உயர்வினை அதன் திரண்ட பயனுடன் இரண்டு **(2)** வருட காலத்திற்கு நிறுத்தம் செய்து அதன் பணப்பலன்கள் (Monetary Benefits) **03–04–2010–**ஆம் தேதி முதல் வழங்க நிர்வாகம் வழங்கிய **21–04–2010** நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 536 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 10 செப்டம்பர் 2018, ஆவணி 25, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/893/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை) லிட்., திண்டுக்கல் மண்டலம், திண்டக்கல் என்ற நிர்வாகத்திற்கும், மனித உரிமைகள் கழக தொழிற்சங்கம் ஜெயமங்கலம் அஞ்சல், தேனி மாவட்டம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

**1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, திருச்சி, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–**ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2ஏ)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருச்சி, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. செ. பாலகிருஷ்ணன், பணி எண் **55777**, ஓட்டுனருக்கு அலுவலக உத்தரவுகளில் தண்டனை வழங்கப்படும், தற்காலிக வேலை நீக்க நாட்களை கழக நிலையாணைகளுக்கு **[17(4)(இ)(3)(4)(ஈ)]** மாறாக இருப்பில் உள்ள கழிக்கப்பட்ட விடுப்புகளை திரும்ப தொழிலாளியின் விடுப்பு இருப்பில் சேர்க்க வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில், உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம் கோட்டம்-1) லிமிடெட், கும்பகோணம்.**

*[அரசாணை (டி) எண் 515, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (சி)த் துறை, 4 செப்டம்பர் 2018, ஆவணி 19, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/894/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்–1) லிமிடெட்., கும்பகோணம் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர் சங்கம் கும்பகோணம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை கும்பகோணம் தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, இணைப்பில் காணும் எழுவினாவுடன் கும்பகோணம் தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு கும்பகோணம், தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. சி. அமலதாஸ், ஓட்டுநர் (பணி எண் 89 டி.ஆர். 1098) என்பவருக்கு நிர்வாகத்தால் வழங்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 5 தண்டனைகள் நியாயமானதுதானா? இல்லையெனில் உரிய நிவாரணம் பிறப்பிக்கவும்.

| *வரிசை எண்.* | *தண்டனை வழங்கிய கோப்பு எண்.* | *தண்டனை விவரம்* |
|---|---|---|
| 1 | தஅபோக/டி10/திரு/99/02, நாள். 20–05–2002 | வருடாந்திர ஊதிய உயர்வு மூன்று மாத காலத்திற்கு தொடர்ச்சியாக (with cumulation effect) நிறுத்தம் செய்யப்பட்டது. |
| 2 | தஅபோக/டி10/திரு/373/8–03, நாள். 30–09–2003 | மூன்று மாத காலம் தொடர்ச்சியாக (with cumulation effect) ஆண்டு ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டது. |
| 3 | தஅபோக/டி8/வே/170/2002, நாள். 30–12–2002 | ஒரு வருடம் தொடர்ச்சியாக (with cumulation effect) ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டது. |
| 4 | தஅபோக/டி10/திரு/298/03, நாள். 22–11–2003 | ஒரு வருட காலம் தொடர்ச்சியாக (with cumulation effect) ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டது. |
| 5 | தஅபோக/டி8/வே/108/2002, நாள். 31–08–2002 | ஆறு மாத காலம் தொடர்ச்சியாக (with cumulation effect) ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டது. |

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில்.**

*[அரசாணை (டி) எண் 516, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (சி)த் துறை, 4 செப்டம்பர் 2018, ஆவணி 19, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/895/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம், நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழில்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறை, இணைப்பில் காணும் எழுவினாவுடன் திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. E.K. கட்சன், ஓட்டுநருக்கு (பணி எண் 3394) ஊதிய உயர்வை வருங்காலத்தில் பாதிக்கும் வண்ணம் மூன்று வருடத்திற்கு நிறுத்தி வைத்தும், தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்த நாட்களை தகுதி வாய்ந்த விடுப்பாக அமுல்படுத்த வேண்டும் என்று நிர்வாகம் வழங்கிய 24–02–2017 நாளிட்ட தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதுதானா? ஆமெனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

*[அரசாணை (டி) எண் 528, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (சி)த் துறை, 6 செப்டம்பர் 2018, ஆவணி 21, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/896/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் என்ற நிர்வாகத்திற்கும், தமிழக அரசு போக்குவரத்து தொழிலாளர் சங்கம், நாகர்கோவில் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழில்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறை, இணைப்பில் காணும் எழுவினாவுடன் திருநெல்வேலி தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு திருநெல்வேலி, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. K.P. வில்சன், நடத்துநரின் (பணி எண் 3749) ஊதிய உயர்வை வருங்காலம் பாதிக்கும் வண்ணம் மூன்று வருடதிற்கு நிறுத்தி வைத்து, நிர்வாகம் வழங்கிய 08–12–2016 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா? ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விருதுநகர்.**

*[அரசாணை (டி) எண் 527, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 5 செப்டம்பர் 2018, ஆவணி 20, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/897/2018.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விருதுநகர் என்ற நிர்வாகத்திற்கும், அரவிந் கெஜ்ரிவால் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன், மதுரை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தொழிற்தகராறை நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தொழிற்தகராறு, மதுரை, தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2ஏ) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு மதுரை, தொழிலாளர் நீதிமன்றத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணைப்பு**

**எழுவினா**

திரு. எஸ். பி. பொன்னுச்சாமி, பணி எண். சி.ஆர். 6130 நடத்துனருக்கு ஊதிய உயர்வை ஒன்றரை வருடம் (18 மாதங்கள்) அதன் திரண்ட பயன்களுடன் நிறுத்தம் செய்து நிர்வாகம் வழங்கிய 10–04–2012 நாளிட்ட உத்தரவினை ரத்து செய்ய வேண்டும் என்ற தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானதா?

ஆம் எனில் உரிய உத்தரவு பிறப்பிக்கவும்.

**தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், சென்னை.**

**திருத்த அறிவிக்கை**

*[அரசாணை (டி) எண். 537, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, 10 செப்டம்பர் 2018, ஆவணி 25, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

No.II(2)/LE/898/2018.—*தமிழ்நாடு அரசிதழ்* வெளியீடு எண் 5, நாள் 31–01–2018, பகுதி II–பிரிவு 2–ல் அறிவிக்கை எண் No.II(2)/LE/113/2018, பக்க எண் 100–ல் அரசாணை (டி) எண் 5, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, நாள் 03–01–2018–க்கு கீழ்க்காணும் திருத்தம் வெளியிடப்படுகிறது.

**திருத்தம்**

அரசாணை (டி) எண். 5, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (பி1)த் துறை, நாள் 03–01–2018–ன் "அறிவிக்கை" பகுதியில், பத்தி 1–ல் இடம்பெற்றுள்ள, "தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி" என்ற சொற்களை "அரசு விரைவு போக்குவரத்து கழகம் சென்னை" என திருத்தி படிக்கவும்.

**சுனீல் பாலீவால்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**பள்ளிக் கல்வித் துறை**

*தலைமைச் செயலகம், 2018 அக்டோபர் 10.*

No.II(2)/SE/899/2018.

**[பள்ளிக்கல்வி–மேல்நிலைப் பாடத்திட்டம்–மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டில் மாநில அளவிலான அரசு பொதுத் தேர்வு நடத்துதல்–ஆணை வெளியிடப்பட்டது–திருத்தம் வெளியிடப்படுகிறது.]**

**கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—**

*[அரசாணை (நிலை) எண் 195, பள்ளிக் கல்வி (அ.தே)த் துறை, 14 செப்டம்பர் 2018, ஆவணி 29, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2049.]*

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை நிலை எண். 100, பள்ளிக் கல்வி (அ.தே) நாள் 22–5–2017
2. அரசுத் தேர்வுகள் இயக்குநர் கடித எண் 001713/எச்எப்1/2018 நாள் 10–9–2018
3. மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரிய தலைவரின் கடித எண் 23160/ஐ/2018, நாள் 10–9–2018

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் ஆண்டிலிருந்து மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசு பொதுத்தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநர் மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு தொடர்பாக கீழ்கண்ட விவரங்களை அரசுக்கு தெரிவித்துள்ளார்:-

(i) மார்ச் 2018-ல் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு முதன்முறையாக நடத்தப்பட்டதால், புதிய தேர்வுமுறைகள் பற்றிய போதிய தெளிவின்மை, குழப்பம் ஆகியவை காரணமாக மாணாக்கர்கள் தேர்வுக்கு சரியான முறையில் தயாராகாத காரணத்தினால், அதிக எண்ணிக்கையிலான மாணாக்கர்கள் மார்ச் 2018–இல் நடந்து முடிந்த மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

(ii) மார்ச் 2018 முதல் மேல்நிலை முதலாம் ஆண்டிற்கும் அரசு பொதுத்தேர்வுகள் நடத்தப்பட்டதால் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு எனத் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளும் அரசு பொதுத்தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணாக்கர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். எனவே, மேநிலை முதலாம் ஆண்டு மாணாக்கர்களுக்கு பொதுத்தேர்வு நடத்துவதை இரத்து செய்யக் கோரி அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு மனுக்கள் பெறப்படுகின்றன.

(iii) 2018–2019–ஆம் கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான மதிப்பெண்களை மட்டும் பதிவு செய்து மதிப்பெண் சான்றிதழ் வழங்கக் கோரி முதலமைச்சர் தனிப்பிரிவு வழியாக அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

(iv) மேல்நிலை முதலாம்/இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான மதிப்பெண்களைப் பதிவு செய்து ஒருங்கிணைந்த மதிப்பெண் சான்றிதழ் வழங்கினால், அம்மாணாக்கர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் அவர்களது உயர்கல்வி தொடங்கி வேலைவாய்ப்பு வரை அதன் தாக்கம் நீடிக்கும்.

3. அரசுத் தேர்வுகள் இயக்குநர் மேலும் தனது கடிதத்தில் மேற்கண்ட மேற்கண்ட நேர்வு தொடர்பாக, மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரிய நிருவாகக் குழுவுடன் கலந்தாலோசிக்கப்பட்டதில், கீழ்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டதென தெரிவித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு, ஏற்கெனவே வெளியிடப்பட்ட மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் சில இனங்களுக்கு மட்டும் பின்வருமாறு திருத்தம் வெளியிட அரசைக் கேட்டு கொண்டுள்ளார்:–

(i) மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பாடத்திட்டங்களை முழுமையாக கற்கும் மாணாக்கர்கள் சிறப்பு வகுப்புகளுக்குச் (Special Coaching) செல்லாமலேயே, தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தகுதி பெற வாய்ப்புள்ளது என்பதால், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வினை தொடர்ந்து நடத்தலாம்.

(ii) மேலே படிக்கப்பட்ட அரசாணையின்படி மேல்நிலை முதலாம் / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான மதிப்பெண்களைப் பதிவு செய்து மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு ஒருங்கிணைந்த சான்றிதழ் வழங்காமல், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் எனத் தனித்தனி மதிப்பெண் சாறிதழ்கள் வழங்கும் பொருட்டு அரசாணைக்கு திருத்தம் வெளியிடலாம்.

(iii) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் போது மேல்நிலை முதலாம் / இரண்டாமாண்டு பொதுத் தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், முதலாம் / இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற விவரத்தை பதிவு செய்து தனித்தனி மதிபெண் சான்றிதழ்கள் (Mark Certificate) வழங்கலாம்.

(iv) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டு பொதுத் தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத தேர்வர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் சமயம், அவ்விரு பொதுத் தேர்வுகளிலும் பெற்ற மதிப்பெண்களை மட்டுமே பதிவு செய்து மதிப்பெண் பட்டியல் (Mark Statement) வழங்கலாம். இவ்வகையான தேர்வர்களுக்கு, அவ்விரு தேர்வுகளிலும் முழுமையாக தேர்ச்சி பெறும் வரை மதிப்பெண் பட்டியல் மட்டும் வழங்கலாம்.

(v) மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்களே உயர்கல்வி பயில தகுதியானவர்கள். மேலும் மாணவர்களின் நலன் கருதி, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு மதிப்பெண்களை மட்டும் உயர்கல்வி சேர்க்கைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

4 அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரின் மேலே குறிப்பிடப்பட்ட கருத்துருவினைக் கவனமுடன் பரிசீலித்த அரசு, அரசு தேர்வுகள் இயக்குநர் மற்றும் மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரிய நிர்வாகக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, மாணாக்கர்களின் நலன் கருதி, அவர்களின் மன அழுத்தத்தினைக் குறைக்கும் வகையில் மேலே படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி எண் 12(ஆ) மற்றும் (ஏ)வுக்கு பதிலாக கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்து ஆணையிடுகிறது.

பத்தி 12 (ஆ)க்கு பதிலாக

''மேல்நிலை முதலாம் / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மட்டும், மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கு 600 மதிப்பெண்கள் என பதிவு செய்து தனித்தனி மதிப்பெண் சான்றிதழ்கள் (Mark Certificate) வழங்கப்படும்''.

பத்தி 12(ஏ)க்கு பதிலாக

''மேல்நிலை முதலாம் ஆண்டு அல்லது இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விலோ அல்லது இரண்டு பொதுத் தேர்வுகளிலுமோ முழுமையாக தேர்ச்சியடையாத மாணாக்கர்களுக்கு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டு மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கும் சமயம், அவ்விரு பொதுத் தேர்வுகளிலும் முழுமையாக தேர்ச்சி பெறும் வரை மாணாக்கர்கள் பெற்ற மதிப்பெண்களை மட்டும் பதிவு செய்து மதிப்பெண் பட்டியல் (Mark Statement) வழங்கப்படும்''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU